**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். ப. முரளி அர்த்தனாரி Ph.D., FSKV,
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 26-6-2019

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**தாவர ஒட்டுண்ணி நூற்புழு மேலாண்மை பற்றிய கலந்தாய்வு கூட்டம்**

நூற்புழுத் துறை தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயமுத்தூர் பாதிக்கப்பட்ட நடவுப் பொருட்களின் மூலம் நூற்புழுப் பரவல், அதனால் ஏற்படும் பண்ணைத் தோட்டமகசூல் பற்றியும் பல செயல்முறை விளக்கக் கூட்டம் தமிழகம் முழுவதும் மேற்கொள்ளப்பட்டது. புதிதாகத் தொடங்கப்பட்ட பழப் பண்ணை தோட்டங்களில் நூற்புழுத் தாக்கங்கள் மிகுதியாக கண்டறியப்பட்டன. நூற்புழு ஒரு நுண்ணிய புழு. இவை அனைத்து மண் மற்றும் பயிரிடப்பட்ட பயிர்களில் வாழக்கூடியவை ஆகும். உழவர்கள் நூற்புழுக்களினால் ஏற்படும் தாக்கத்தினை கண்டறிவதில்லை. இதற்கினங்க, நூற்புழுவியல் துறையின் மூலம் ஒருநாள் கலந்தாய்வுக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது. கள நோயறிதல் மற்றும் தோட்டக் கலைத் தாவர ஒட்டுண்ணி நூற்புழு மேலாண்மை 26, ஜுன், 2019 அன்று தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர், முனைவர். நீ. குமார் தலைமையில் நடைபெற்றது.

இந்தஒருநாள் கலந்தாய்வுக் கூட்டத்தின் மூலம் நூற்புழு இல்லாநடவு பொருட்களின் செயல் விளக்கமுறைகளை மாநில விரிவாக்கத்துறை, கள அதிகாரிகள் மற்றும் மத்திய அரசின் தனிமைப்படுத்தப்பட்ட(Quarantine) துறை அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டது. நூற்புழுவினால் ஏற்படும் தாக்கத்தினைகண்டறிவதற்கானமுறையை இந்த ஒரு நாள் கலந்தாய்வுக் கூட்டத்தில் பங்கேற்றவர்களுக்கு நேரடி செயல் விளக்கமுறைகள் மற்றும் நூற்புழு இல்லாநடவு பொருட்கள் உற்பத்தி செய்வதற்கான ஆலோசனை வழங்கப்படட்டது.

இந்நிகழ்வில், டாக்டர். கே.எஸ். சுப்பிரமணியன், ஆராய்ச்சி இயக்குநர். சிறப்பு முகவரி வழங்குபவர் டாக்டர் உமாராவ், அகில இந்திய ஆராய்ச்சி திட்டம் (நூற்புழுவியல் துறை) மற்றும் ஆராய்ச்சி ஒருங்கிணைப்பாளர், இந்திய விவசாய ஆராய்ச்சி குழு, புது தில்லி ஆகியோர் முதன்மை விருந்தினர்களாக கலந்து கொண்டனர்.

முன்னதாக, டாக்டர். கு. பிரபாகரன் (தாவர பாதுகாப்பு ஆய்வுகளுக்கான மையம்) அவர்கள் வரவேற்புரை வழங்கினார். இறுதியாக, டாக்டர். கி. பூர்ணிமா, நூற்புழுத் துறை, பேராசிரியர் மற்றும் தலைவர். நன்றியுரை வழங்கினார்.

மக்கள் தொடர்பு அலுவலர்